## தொழிற் முன்னேற்ற பாதை

# கம்மியர் குளிர்பதன மற்றும் தட்ப வெப்பநிலை கட்டுப்படுத்துதல்



## ஐடிஐ-யில் பயிற்றுவிக்கப்படும் திறன்கள்:

- பல்வேறு கருவிகள், இயந்திரச் சாதனங்களை கையாளுதல் மற்றும் அவற்றின் பயன்களை அறிதல்
- பல்வேறு இயந்திர, மின்சார மற்றும் மின்னணுவியல் உதிரி பாகங்களை பற்றிய அறிவை பெறுதல்
- ரெப்பிரிஜ்ரேஷன் மற்றும் ஏர் கண்டிஷ்னிங் இயந்திரச் சாதனங்களை பொருத்துதல், பழுதுநீக்குதல் மற்றும் பராமரித்தல் பற்றி அறிதல்
- ரெப்பிரிஜ்ரேஷன் மற்றும் ஏர் கண்டிஷ்னிங் தொடர்புடைய திட்டப்பணி, தொழில்துறையை பார்வையிடுதல், தொழிற்சாலையினுள் பயிற்சி அளித்தல் மற்றும் தொழிற்பிரிவு சார்ந்த பயிற்சி அனுபவத்தை மேம்படுத்துதல்
- ஓசோன் படலம், உலக வெப்பமயமாதல் மற்றும் தொழிற்பிரிவு சார்ந்த பாதுகாப்பில் விழிப்புணர்வு



## தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள்:

- ரெப்பிரிஜ்ரேஷன் மற்றும் ஏர் கண்டிஷ்னிங் தொழிற்சாலையின் இயந்திரச் சாதனங்களை அசெம்பிளிங் செய்தல், பொருத்துதல், பழுது நீக்குதல் மற்றும் பராமரித்தல்
- இயந்திரம் மற்றும் உதிரிபாகங்களை விற்பனை செய்தல், பொருத்துதல், பழுது நீக்குதல் மற்றும் பராமரித்தல் களப்பணிகளை செய்தல்
- உற்பத்தி செய்யப்பட்ட பொருள் மற்றும் மூலப்பொருள்களின் தரம் பற்றிய அறிவை முழுவதும் அறிந்து கொள்ளுதல்
- ரெப்பிரிஜ்ரேஷன் மற்றும் ஏர் கண்டிஷ்னிங் தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்களை கையாளும் திறன்
- ரெப்பிரிஜ்ரேஷன் மற்றும் ஏர் கண்டிஷ்னிங் இயந்திரச் சாதனங்களை சொள்முதல் செய்யும் வாடிக்கையாளர்களை கையாளும் திறன்

## ஐடிஐ முடித்தபின் என்னவாகலாம்:

### ஆரம்ப நிலை

உதவி டெக்னீசியன், பணிமனை உதவியாளர், தொழிற்பழகுநர்

### இடை நிலை

டெக்னீசியன், முதுநிலை டெக்னீசியன். உதவி மேற்பார்வையாளர் (சர்வீஸ் மற்றும் திட்டம்), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில்- இளநிலை மற்றும் உதவி பயிற்சி அலுவலர், விற்பனை நிர்வாகி

### மூத்த நிலை

மேற்பார்வையாளர் (சர்வீஸ் மற்றும் திட்டம்), பயிற்சி அலுவலர், சுயதொழில் மற்றும் தொழில்முனைவோர் (டீலர்ஷிப், உதிரி பாகங்கள் விற்பனை / தயாரித்தல்)

## ஐடிஐ முடித்தபின் வேலைவாய்ப்புகள்:

- அரசு வேலைவாய்ப்புகள் - இந்திய விமான நிலைம், இந்திய இரயில்வே, பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல் லிமிடெட், அனுமின் நிலையங்கள், இஸ்ரோ-இந்திய விண்வெளி ஆய்வு மையம், அரசு உணவு பொருள் பதப்படுத்தும் கிடங்கு, அரசு மருத்துவமனை, மருந்து மற்றும் நோய் தடுப்பு ஆராய்ச்சி மையம், கப்பல் கட்டுமான துறை மற்றும் துறைமுகம்
- ரெப்பிரிஜ்ரேஷன் மற்றும் ஏர் கண்டிஷ்னிங் இயந்திரச் சாதனம் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தனியார் நிறுவனங்கள்
- தகவல் தொழில்நுட்ப மையங்கள், வணிகரீதியான ஷாப்பிங் மால்கள், திருமணம்/விழா மண்டபம் , மூன்று மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் ஆட்டோ மொபைல் ஏர்கண்டிஷனிங் நிறுவனங்கள் மற்றும் பல

## ஐடிஐ முடித்தபின் என்ன படிக்கலாம்:

- தொழிற் பழகுநர் பயிற்சி (NAC)
- கைவினைஞர் திட்ட பயிற்றுநர் பயிற்சி (CITS)
- பட்டயப்பொறியியல் (Diploma Engineering)

QUEST ALLIANCE

வாய்மையே வெல்லும்

Industrial Training Institute

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை